6 - MAY 1953
MADRAS

பதிவு எண்—M. 5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

5-கிளை தருதலம், மாம்பாக்கம்; நந்தன, பங்குனி; 3—4—53 தளிர்-27

குருகுலத்தின் குறிக்கோள் :

பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் தெரிவிப்பது

வற்றல் மரம்

எத்தனையோ பேர் 'மரம்' என்று பெயரெடுக்கிறார்கள்; "நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய மாட்டாதவன் நன் மரம்" என்று ஔவையாரும் அத் தன்மையோரைத் திட்டினார்.

திருவள்ளுவர், சிலரை விலங்கு என்றும், சிலரை மரம் என்றும் இரக்கத்துடன் இகழ்தலையும் காண்கிறோம். நூலறிவு இல்லாதவரை இவர் விலங்குகள் என்றார்; அன்புள்ளம் இல்லாதவரை மரங்கள் என்கிறார். அதுவும், 'வற்றல் மரம்' என்று உள்ளீரம் இல்லாத நிலையை நன்கு சுட்டிச் சொல்கிறார்.

சிறிதேனும் உணர்ச்சி உள்ளவர்கள், கருணையே வடிவமான பெரியோர்களிடம் இத்தகைய பழிப்புக்களைக் கேட்டுக்கொள்ளும் நிலையில் தம்மை வைத்துக்கொள்ள மாட்டார்கள். அறிவையும் அன்பையும் பெற்று நன் மக்களெனத் திகழ்வார்கள்.

நல்ல நோக்கமும் அதற்கேற்ற அறிவு அன்புப் பண்புகளுமாகிய போக்கும் இல்லாதார், வெறும் மூச்சு வாழ்க்கையை உடையவரே; அதாவது, உண்டு உடுத்து உறையும் வெற்று ஆயுள் வாழ்க்கையாகிய பொது வாழ்க்கையை உடையவரே. மக்கட் பிறப்புக்கு இத்தகைய உயிர்வாழ்க்கை ஏற்றதன்று. மரத்தைப் போலவும் விலங்கைப்போலவும் உயிர் வாழ்வதற்கா மக்கள் பிறந்தது? அறத்தோடு கூடி வாழ்வதாகிய உணர்வு வாழ்க்கையையன்றோ மக்கள் மேற்கொள்ள வேண்டும்!

பாரும் களருமான வலிய நிலத்தில் நீரூற்றும் பெறாத உலறிய மரம் என்ன பயனை உடையது? ஏதோ தற்செயலாய்க் கிடைக்கும் மழையினால் ஓரோ ஒருகால் சிறிது தளிர்விட்டு விட்டால் போதுமா? பூத்துக் காய்த்துக் குலுங்கி நிற்கும் அழகும், கனிந்து நிற்கும் பயனும் பெறுதலல்லவா நல்லது! மக்கள் உள்ளன்பு பெற்றால், பழிப்பும் நீங்கி அழகும் பயனும் ஓங்கி, மிகவும் மாட்சிமையாய்த் திகழலாமே!

அன்பகத் தில்லா
உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரம் தளிர்த்தற்று.

அன்பு அகத்து இல்லா உயிர் வாழ்க்கை—உள்ளத்தில் அன்பில்லாத உயிர் வாழ்வு; வன்பால் கண் வற்றல் மரம் தளிர்த்தற்று—வலிய நிலப்பகுதியில் வற்றலாகிய மரம் சிறிது தளிர்விட்டாற்போன்றது.

'அகத்து' என்பதனால் உள்ளன்பு குறிக்கப்பட்டது. சில காரியம் நிறைவேறுவதற்காகப் புறத்தில் மட்டும் செய்யும் போலி அன்பை இதனால் ஆசிரியர் மறுத்தார். சிறப்புகள் இன்றி வெற்று மூச்சு வாழ்க்கை என்றற்கு, உயிர் வாழ்க்கை என்றார்.

உயிர் வாழ்தல் மாத்திரம் உடைமையின் 'மரம்' என்றும், நடமாடுதலும் வளந் தேடுதலும் சிறிது இடையிடையே காணப்படுதலின் 'தளிர்த்தற்று' என்றும், உள்ளீரமாகிய அன்பு இல்லாமையின் 'வற்றல்' என்றும், புறத்தும் மெய்யன்பு காணப்படாமையின் அச் சூழலை 'வன்பால்' என்றும் விதந்தார்.

வன் நிலத்தில் வற்றல் மரம் தளிர்த்தல் இயலாததாகலின், உள்ளன்பில்லாத உயிர் உலகத்தில் உயிர் வாழ்தலும் இல்லறக் கடமைகளுடன் சிறத்தலும் மாட்டாமையே என்பதும் பெறப்பட்டன.

"முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை 'வெளியீடு)

5-ம் ஆண்டுக் கையொப்பம்

(3-10-52 முதல்)

உள் நாடு	ரூ.	4 0 0
வெளி நாடு	ரூ.	6 0 0
தனித் தாள்		0 1 0
ஆயுள்— கையொப்பம்	ரூ.	100 0 0

விற்பனையாளர்கள், தேவைக்கு முன்பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்,

மதுராந்தகம் P. O.

(தென் இந்தியா)

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்;
தீதும் நன்றும் பிறர்தர வாரா."
—புறநானூறு.

கிளை	நந்தன, பங்குனி,	தளிர்
5	3-4-53 வெள்ளி	27

நாட்டுச் சேமிப்பு

நாட்டை வளப்படுத்த, தேவையான முதற்பொருள்கள் இங்கு நிறைய இருந்தும், அவை பயன் படுத்தப்படாமையால் இந்நாட்டில், சிறப்பாகத் தென்னாட்டில், வேலை யின்மையும் வறுமையும் மிகுந்து காணப்படுகின்றன. இம் முதற் பொருள்களையும் பிற இயற்கை வளங்களையும் பயன் படுத்தப் பெரிய அளவில் முதலீடு தேவைப்படுகிறது. 2069 கோடி ரூபாய்களை முதலீடாகக் கொண்டு நாட்டை ஓரளவுக்கு வளப்படுத்தவும் சீர்திருத்தவும் கூட்டக ஆட்சி ஐந்தாண்டுத் திட்டம் ஒன்றை இயற்றியுள்ளது. மக்கள் தரும் வரிப்பொருளே ஆட்சியின் வருவாய். வருவாயை மிகுதிப்படுத்த அளவுகடந்து வரி உயர்த்தப்படுமானால் மக்கள் தாங்கமாட்டாமல் கிளர்ச்சி செய்வர். கிளர்ச்சிகள் நடவா வண்ணம், ஆனால் பெருந்தொகையைத் திரட்டுவதற்கு மக்களிடமிருந்து கடன் வாங்க எண்ணி இருக்கின்றனர்.

மேற்கூறிய 2069 கோடி ரூபாய்களில் வரி முதலிய வருவாய்களும் வெளிநாட்டுதவியும் போக மக்களிடமிருந்து கடனாகவும் சேமிப்பாகவும் 520 கோடி ரூபாய்களைப் பெறத் திட்டமிட்டிருக்கின்றனர். வெளிநாட்டுதவி எவ்வாறு அமையும் என்பதை நாம் கூறுவதற்கில்லை. இந்நாட்டுப் பண்டங்களின் ஏற்றுமதிக் குறைவினாலும், பிற காரணங்களாலும் வரிப்பணம் குறைகின்றது. பொதுமக்களிடமிருந்து எதிர்பார்க்கப்படும் தொகையும் கிடைக்காவிட்டால் பணம் அதிகமாக அச்சிடப்பட்டு வழங்கப்படும் என்று கூறப்படுகிறது. இம்முறை கையாளப்படுமானால் பொருளாக்கம் மிகாமல் பணப் பெருக்கம் மட்டும் உண்டாகி, நாட்டின் பொருள்நிலை கெடக்கூடும். இந்நிலை வாராமல் நாடு விரைவில் வளர்ச்சியடைய வேண்டுமானால் மக்களிடம் சேமிப்பு எண்ணமும் ஆட்சியிடம் பொருளைக் கொடுத்துதவும் எண்ணமும் உண்டாக வேண்டும். பஞ்சத்தால் உணவுக்கும் வழியின்றி வருந்தும் எளிய மக்களுக்கு இச் சேமிப்பு எண்ணம் இருந்து பயனில்லை. செல்வர்களிடம் இவ்வெண்ணம் தோன்ற வேண்டும்.

பொருள், தொழில் வளத்திற்கு முதலாகப் பயன்படாமல் முடங்கிக் கிடக்குமானால் அதன் முழுப்பயனை உண்டாக்காது. இவ்வாறு பயன் தராமல் முடங்கிக்கிடக்கும் பொருள் இந்நாட்டில் ஏராளமாக இருக்கிறது. இதற்கு உயிர்ப்பும் வளர்ச்சியுமில்லை. இது மறைந்து கிடக்கின்றது. இச்செல்வம் செயற்பட்டாலன்றி நாடு விரைவில் முன்னேற வழியில்லை. நாட்டன்பு மிக்க செல்வர்கள் இந்நிலையை எண்ணித் தக்க முறையில் நடந்துகொள்ள வேண்டும்.

மக்களிடமிருந்து பொருளைத் திரட்ட ஆட்சி தக்க முயற்சிகளை எடுக்கவில்லை என்று தோற்றுகிறது. இரண்டாம் உலகப் போர் நடந்தகாலத்தில் பொருள் சேர்ப்பதற்கு எடுத்துக்கொண்ட முயற்சிகளுள் ஒரு சிறு பங்கும் இன்று காணப்படவில்லை; போர்க் காலத்தில் சேமிப்புக்குக் கொடுக்கப்பட்ட முதன்மை ஆக்கவேலைகளைச் செய்வதற்காகவும் கொடுக்கப்படவேண்டும். ஐந்தாண்டுத் திட்டத்தின் நோக்கங்களைப் பற்றியும், அது நிறைவேற மக்கள் பொருள் கொடுத்து உதவவேண்டுவதன் தேவையைப்பற்றியும், இதுவரை நடந்துள்ள பணிகளைப்பற்றியும் பொது மக்களிடம் விளம்பரப்படுத்திப் பொருளைத் திரட்டுதற்கு ஒரு தனிப்பிரிவு (இலாகா) அமையவேண்டும். அமையின், ஆட்சியாளர் மக்களிடமிருந்து சேமிப்பாகவும் கடனாகவும் எதிர்பார்க்கும் பொருளை எளிதாகப் பெறலாம்.

சென்னை மாகாண மக்களின் சேமிப்பு, நகராண்மைக் கழகங்களுக்கும் தேவைப்படுகின்றது. குடி தண்ணீருக்கு வசதிகள் செய்தல், சாக்கடை கட்டுதல் முதலிய பணிகளுக்காக மக்களிடமிருந்து கடன் திரட்ட ஆட்சி சென்னை நகராண்

குருகுலச் செய்தி

திருவாசகத் திறம்

[ஆசிரியர் அவர்கள் அண்மையில் மேற்கொண்ட உண்ணு நோன்பின்போது, திருவாளர் வேதாசலம் செட்டியார், மாணிக்கவாசகர் திருவுருவம் வார்த்து குருகுலத்துக்கு உதவினார். அப்போது நடைபெற்ற வழிபாட்டு நிகழ்ச்சிகளில் திளைத்து இன்புற்று உருகிப் பெற்ற அருள் விளக்கத்திற்கிடையே, ஆசிரியர் மொழிந்த நல்லுரையினால் தெரிந்த உண்மைகள்]

மாணிக்கவாசகர் சிவ சமய முதலாசிரியர். சங்க காலத்துக்குப் பின் நிலைகெட்ட தமிழகத்தை நெறிப்படுத்தி, நாட்டுணர்ச்சியோடு சமய உணர்ச்சியைப் பிணைத்து அதன் பிற்கால வளர்ச்சிக்கெல்லாம் அடிகோலியவர்.

உலகியல் நலங்களில் எவ்வளவோ சிறப்பான நிலையில் பாண்டிநாட்டு முதலமைச்சராக இருந்து வந்த அடிகள், அவைகளிலேயே திளைத்து விடாமல், பிறவிப்பிணி போக்கும் நன்மொழியை (உபதேசம்) நல்கத்தக்க ஆசிரியர் ஒருவருக்காக ஏங்கிக்கொண்டிருந்தார்கள். அரசனுக்காகக் குதிரைகள் வாங்கத் திருப்பெருந்துறை சென்றபோது, ஆண்டவனே குருவாக வந்து ஐந்தெழுத்தை (பஞ்சாட்சரத்தை) வழங்கி அடிகளை ஆட்கொண்டு மறைந்தான்.

தாம் பெற்ற நன்மொழியை முதலாக வைத்து அதனை விளக்குகின்ற முறையிலேயே சிவபுராணத்தையும், பின்னுள்ள திருவாசகப் பாடல்களையும் அடிகள் அருளிச் செய்வாராயினர்.

“முன்னைவினை ஓய உரைப்பன் யான்” என அடிகளே சிவபுராணம் ஓதுவதன் பயனை அதன் முதலிலேயே குறிப்பிடுகின்றனர். ஆகவே அதனை முறைப்படி பொருளுணர்ந்து பாராயணம் செய்தால் நம் பழைய வினைகள் (சஞ்சிதம்) அத்தனையும் ஒழிந்துவிடும் என்று தெரிகிறது. பழைய வினைகள் நீங்க அல்லல்தரும் பிறவியே அறுதலின், “அல்லற் பிறவி அறுப்பானேயோ என்று சொல்லிய பாட்டு” எனச் சிவபுராணத்தின் இறுதியில் அடிகள் குறித்தார்.

இனி, திருவாசகத்தின் மற்றைப் பாடல்களை உண்மையன்புடன் ஓதிக்கொண்டு வந்தால், இப்பிறவியில் நம் நுகர்வுக்குரிய (பிராரத்துவ) வினைகள் அல்லலின்றி விளையாட்டாகவே கழிந்துபோகும் என்பதை அதனை அருளிய மாணிக்கவாசகர் வாழ்க்கையைக் கொண்டே உணரலாம். திருவாசகப் பாடல்களிற் பல விளையாட்டுப் பாடல்களாகவே அமைந்திருக்கும் குறிப்பும் இதனை நமக்கு உணர்த்தாமல் உணர்த்திக்கொண்டிருக்கின்றது எனலாம். அவ்வப்போது நல்லவர்களுக்கு வரும் துன்பங்கள் விலகுகிறபோது, ‘மலைபோல வந்த துன்பம் பனிபோல நீங்கியது’ என்று சொல்வதை நாம் கேட்கின்றோமல்லவா! மாணிக்கவாசகர்க்கு வந்த துன்பங்கள் அப்படித்தானே விலகியொழிந்தன.

பிறவிக்குக் காரணமான வினைகளில் பழவினையும், நுகர்வினையும் நீங்கியபின், புது வினையாகிய எதிர்வினை (ஆகாமியம் – இப் பிறவியில் நாம் புதிது செய்யும் நன்மை தீமைக்குரிய வினை) உண்டாக வழியில்லை.

ஆதலால் திருவாசகம் காட்டுகிற நெறியில் நம்மை நாம் முழுதும் ஆண்டவனுக்கு ஒப்புக்கொடுத்து, “நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே” என்றபடி, பயன் கருதாது ஆருயிர்த் தொண்டுகளை அதாவது அருளியல் அடிப்படையோடு கூடிய உலகியல் தொண்டுகளை இறைபணிகளைத் திருவாசக விளையாட்டுகளைப்போல் செய்துகொண்டு வந்தால் வினை நீங்கிய அருள் நிலை கைகூடி விடுதல் திண்ணம்.

அப்புறம், மீண்டு வாராப் பேரின்ப நிலைதான்!

மைக் கழகங்களுக்கு வாய்ப்பளித்துள்ளது.

நாடு நகரங்களின் வளர்ச்சிக்காக மக்கள் ஊக்கத்தோடு பொருளைச் சேமித்துக் கொடுத்து உதவுவார்களாக!

—மெய்கண்டான்.

அருள் துறை

* நெஞ்சு விடு தூது *

(முத்துசாமி)

"தேருங்கால்........புகலக்கேள்"

ஆராயுங்கால் நெஞ்சமே! உன்னைவிட உற்றதுணை எனக்கு வேறொன்றில்லை யென்பதை அறிவாய். 'பாச ஞானம் பசு ஞானங்களை விட்டு நீங்கிப் பதி ஞானமே தலைசிறந்தது என்று அறிந்து அதற்கு முதன்மை கொடுத்து அதனோடு கூடியவர்களே முற்றுந் துறந்த துறவி யாவார்கள். அங்ஙனம் பதி ஞானத்தோடு கூடாது பாச பசு ஞானங்களோடு கூடி வாழ்கிற மற்றவர்கள் பிறப்பிறப் பென்னும் வலையிற்பட்டு மயங்கியவர்களே' என்று, நிலைத்த தன்மை வாய்ந்த தமிழால் தெய்வப் புலமைத் திருவள்ளுவர் உரைத்த மெய் வைத்த சொல்லை விரும்பி ஏற்று நடவாமல் ஐம் புலன்கள் வழியே சென்று அவற்றிற்காவனவே செய்து தீவினையாகிய கடலின் பரப்பிலே பொருந்திப் பொதுமகளிர் கண் வலையிற் பட்டு, கலவிக் கலை நூல்கள் பயின்று மெய்ஞ் ஞானத்தைத் தரும் நூலினைப் படித்தறியாமல் நெஞ்சத் திண்மையாற் கொடுஞ் சொற்கள் பேசி இப்படியே தினந்தோறும் சாவதற்கும் பிறப்பதற்கும் தலைப்பட்டு, என் ஆவி நிலை நிற்கும் வகைக்கு ஒரு வழி பாராய். அதற்கு ஆகும் வகை கூறுகிறேன் கேட்பாயாக.

உறவினர் பொருள்கள் யாவும், என்றேனும் ஒரு நாள் நம்மைப் பிரிவனவே. ஆனாலும் நம் நெஞ்சம் மற்றவைகளைப் போன்று விரைவில் பிரிவதில்லை. நம்மோடு கூடவே இருப்பது. ஆகவே 'உன்னையொழிய உற வில்லை' யென்றார்.

தனியறிவு—பதிஞானம். அது தனிப்பட்ட தன்மையுடையது. ஒப்பும் உயர்வும் அதற்கில்லை. அதனை நாம் கூடவேண்டும்; அதற்காவன செய்யவேண்டும், அதற்காக நூல்களைப் படித்து, அதனைப் பெற்ற அருளாளர்களோடு கூடி அவர்கள் கூறிய வழி நடந்து உய்யவேண்டும். அங்ஙனமல்லாமல் ஐம்புலன் வழிச் சென்றால் பிறந்து பிறந்து இறக்கவேண்டியதுதான். நம் வாழ்வையே, அருளுக்கு முதன்மை கொடுக்கும் வகையில், அதன்முகமாகத் திருப்பிவிட வேண்டும். பெரும்பாலும் மக்கள் தாம் அந்நிலையில் இல்லையென்பதை உணராமலே இருக்கின்றனர். நீறு பூசும் நெறியில் நிற்போரிலும் பலர் அப்படியே இருக்கின்றனர். அருள் முகமாகத் திருப்பி வாழ்வது என்பது என்னவெனின், பொருளையும் கலையையும் உடைமையையும் தன்னையும் அருளுக்கே ஒப்

திருவாசகம் இவ்வாறு பிறவிப் பிணி தீர்க்கும் பெருமருந்தாய்க் கைப்பற்ற இனிய நன் மருந்தாய் இலகுவது என்பதை,

"தொல்லையிரும் பிறவிச் சூழும்
தளை நீக்கி
அல்லல் அறுத்து ஆனந்தம்
ஆக்கியதே—எல்லை
மருவா நெறியளிக்கும்
வாதவூ ரெங்கோன்
திருவா சகமென்னும் தேன்"

என்ற பாடலும் இனிது தெரிவிக்கின்றது.

—தமிழ்ச் சிறுவன்.

நஞ்சன்கூடு பல்பொடி
பாக்டெரியாரின்

யுனைடெட் கன்ஸர்ன்,
54; பந்தர்த் தெரு, :: சென்னை-1

படைத்து அது குறித்த வழியில் வாழ்வது. அருள் என்ன வழி குறித்திருக்கிறது? அருள் பதியப் பெற்ற சான்றோர்கள் வாயிலாக இப்படி நடக்கவேண்டும் என்று விதித்திருக்கிறது. அதன்படி நடந்தால்தான் நாம் நம் வாழ்வை அருள் முகமாகத் திருப்பிக் கொண்டவர்களாவோம். இயன்றவரை என்று சொல்லிக்கொண்டு சில வேளைகளில் அதற்கு ஏற்ப நடத்தலும் மற்ற வேளைகளில் மாறாக நடத்தலும் கூடாவாம்.

மேலே சொன்ன அருளாளர் நூல்களில் தலை சிறந்தது திருக்குறள். அது, வாழ்க்கை வேதம். அதில் கூறிய கருத்து முடிபுகளை இதுவரை தவறு என்று மறுத்து வெற்றி பெற்றவர் யாருமில்லை. அதற்கு மேல் ஒரு முடிபு காட்டியவர்களும் இல்லை. தமிழ் நூலாய் அது அமைந்தது நம் பேறு! தமிழர் நாகரிக உச்சத்தை அது காட்டிக்கொண்டிருக்கிறது. மாப்பாக்கம் குருகுலம் அதனைச் செயலில் கொண்டுவா, அன்பர்களை, தொண்டர்களை, கூவியழைக்கிறது. எத்தனை பேர் அருளுக்கு அதாவது அருளாளர் வாக்குக்கு முதன்மை கொடுத்து வாழ்கிறார்கள் என்பதை இனித்தான் அறிய வேண்டும்.

உமாபதி சிவாச்சாரியார் சந்தானாச்சாரியாரில் ஒருவர். நமக்குக் குரு; தில்லை வாழ் அந்தணர்களில் ஒருவராய் முப்போதும் நடராசப் பெருமான் திருமேனி தீண்டும் பேறு பெற்றவர். திருவைந்தெழுத்தைச் சொல்லிக் கொடியேற்றியவர். அத்தகைய அருளாளர் சொல்கிறார் திருவள்ளுவரைத் 'தெய்வப் புலமைத் திருவள்ளுவர்' என்று; தெய்வப் புலமை யென்பது பதிஞானமன்றோ? அதனைப் பெற்ற திருவள்ளுவர் பாடியது திருக்குறள்! ஆகவே அதிலிருந்து ஒரு குறளை எடுத்துச் சீர்தனை ஏதும் மாற்றாமல் அப்படியே தம் நூலில் வைத்துத் தழுவி மகிழ்கிறார். அவருக்குத் தெரியும் அதன் மதிப்பு! தமிழின் நிலைத்த தன்மையையும் அவர் அறிந்ததுபோல் வேறு யார் அறிந்தார்! சாத்திர நூலில் சாத்திரக் கருத்தை விளக்க வந்தவர், குறள்மொழியை நிலைத்த தன்மை வாய்ந்தது என்கிறார்! உண்மையை எப்படி மறைக்க முடியும்? எப்படியும் வெளி வந்து விடுகிறது! அருளாளர் வாக்கில் வந்த பின் தமிழுக்கு இழுக்கு ஏது? ஏனை மொழியாளர் இதற்கு இழுக்கினைக் கற்பித்து வளர்ச்சிக்குத் தடை செய்யுமிடங்களிலெல்லாம் தமிழர் கடமை யுணர்ச்சி மறவாது காக்க வேண்டும்.

பூவை — ஒரு பறவை; மென்மையானது. அதைப் போன்று மென்மையானவர் மகளிர். ஈண்டுப் பூவையர் என்றது பொது மகளிரை. கலவிக் கலை நூல்கள் அமருகம் கொக்கோகம் போன்ற நூல்கள்; கலவியைக் கலையாகப் பயிலுதல் ஓரளவு நல்லதுதான், விலங்குகள் போலப் பயில்வதை விட. ஆனாலும் இங்குப் பொது மகளிர் உறவு கடியப்பட்டது. மேலும், அக் கலவிக் கலைக்கே முதன்மை கொடுத்து அழிந்து விட்டால், அருளில் திளைப்பது எப்போது? ஆகவே கலவிக் கலையும் கடியப்பட்டது.

'நெஞ்சமே! என் ஆன்ம பதிஞானந் தலைப்பட்டால்தான் வாழ்வு என்பதை மறந்து நிலையில்லாமல் ஐவர் வயப்பட்டு அழிகிறது. இது, நிலையில் நிற்க ஒரு வழி காணவேண்டும்; அதற்கொரு வழி சொல்கிறேன் கேள்' என்று கூறியவாறும்.

இப்பகுதியை முடிக்கு முன் துறவு என்ற சொல்லுக்கு உள்ள பொருளைச் சிறிது தெரிந்து கொள்ள வேண்டும். இப்பகுதியில் வந்த திருக்குறள் "தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி வலைப்பட்டார் மற்றையவர்" என்பது. தலைப்படுதல் அறிவால் கூடுதல். தலைப்பட்டார் துறந்தார் என்றால், கூடியவர் துறந்தவர் என்றுதானே பொருள்? இதனையறியாது மக்கள், துறவி என்றதும் எல்லாம் விட்டுவிடுதல் என்று பொருள் கொள்கின்றனர். துறட்டுக்கோல் என்ற சொல்லைப் பார்க்கலாம். துறட்டுக்கோலால் உயர்ந்த மரக்கிளைகளை வளைத்து மலரோ காயோ பறிப்பர். மலரோ காயோ நம்மிடம் சேர்கிறது. விடுகிறது என்ற பொருள் எங்கே இருக்கிறது? அப்படியானால் துறவு என்பதற்கு எல்லாம் விட்டுவிடுதல் என்ற பொருள் எப்படி வந்தது? வெளியார் வந்து புகுத்தியதாகும் அக் கருத்து. துறவியாய் மனைவி மக்களோடு இருக்கலாம்; திருவள்ளுவர் அப்படித்தான் வாழ்ந்தார். நாயன்மாரும் அப்படியே.

இனி, சேர்தல் அல்லது கூடுதலும், பிரிதல் அல்லது விடுதலும் ஒருசேர நிகழ்வது. துறட்டுக்கோலால் மலர் பறித்தால் மலர் நம்மிடம் சேர்கிறது; மரத்தை விட்டுப் பிரிகிறது. அது போல நாம் இருந்த இடத்திலிருந்து கொண்டே அருளொடு சேர்ந்தால் பொருள் பற்று தானே விடுபடுகிறது. அரு

ளொடு சேர்தல் வெளியாருக்கு அவ்வளவாய்த் தெரிவதில்லை, பொருள்பற்று விடுபட்டது எல்லாருக்கும் தெரியும். முதன் முதலில் மக்கள் உலகைத் துறந்தவர் என்றே சொல்வர். முதலில் அருளொடு சேர்ந்தவர் என்னார். பட்டினத்தாரை என்ன சொல்கிறார்கள் பொது மக்கள்? தாம் ஈட்டிய அவ்வளவு பொருளையும் மனைவியையும் குடும்பத்தையும் கொடி நேரத்தில் விட்டுப் பிரிந்தவர் என்றன்றோ சொல்கின்றனர்? அருளில் கூடியவர் என்று சொல்கிறார்களா? பொது மக்களுக்கு முதலில் தெரிவது பொருள். ஆகவே பொருளால் அவரை அளக்கிறார்கள் அருட் சான்றோர் அப்படியா பார்ப்பர்? ஆகவே திருவள்ளுவர் 'தனியறிவைத் தலைப்பட்டார் தீரத் துறந்தார்' என்றார். பொது மக்களாயின் பொருளனைத்தையும் விட்டார் தீரத்துறந்தார் என்று கூறியிருப்பர்.

இனி, பொது மக்கள் கூற்றாகிய 'விட்டவர் துறந்தவர்' என்பதில் உண்மையில்லை யென்பதையும் ஒரு சிறிது விளக்குவாம். துறந்தாரைப் பற்றிய பேச்சு நிகழக் காரணம் என்ன? துறவிகள் வீடு பெறுவர் என்றற் பொருட்டேயன்றோ? பொருளைத் துறந்து அருளைக் கூடாமலிருந்தால் வீடு பேறு கிடைக்குமோ? பொது மக்கள் கூற்றாகிய 'விட்டார் துறந்தார்' என்பதில், அருளைக் கூடுதல் என்ற முதன்மைக் கருத்தில்லை. ஆகவே, துறவால் பயனில்லையென்றும், வீண்வேலையென்றும். வீண்மட்டுமன்று, தீமையுமாம். இவ் வீண் வேலைக்கோ இவ்வளவு முயற்சி?

பணித் துறை

மகிழ்ச்சியூட்டும் திருச்செயல்கள்

(சூளை, சிதம்பரேசுரர் திருக்கோயிலில் பெரியபுராண விரிவுரையும் திருமுறை விழாவும்)

இக்கால நூல்கள் எத்துணை நிலைத்து நிற்கும் என்பதை ஓரளவு உன்னிக்கக்கூட இயலவில்லை...போகப் போகத்தெரியும்.

இனி, திருமுறைகள் தோன்றி ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாகியும் அவைகளுக்கு அங்கங்கும் விழாக்களும் பிறவும் நடந்து கொண்டே இருப்பதை எண்ணுகின்றபோது அவற்றின் அருளாற்றல் தெரிகின்றது. சென்னையில் சூளைப் பகுதியில் கடந்த ஞாயிறன்று (22-3-53) மிகச் சிறப்புற நிகழ்ந்த திருமுறை விழா —அதனைப் பல மக்களுக்கு நன்கு புலப்படுத்தியது.

அவதானம் பாப்பையர் தெருவில் உள்ள சிதம்பரேசுரர் திருக்கோயிலில் (22-2-53) முதல் (20-3-53) வரை திருவாசகமணி திரு. **K. M.** பாலசுப்பிரமணியம் **B A.,B L.** அவர்களைக் கொண்டு அரிய முறையில் பெரிய புராணச் சொற்பொழிவுகள் நிகழ்த்தப் பட்டன. (20-3-53) அன்று பெருமக்கள் பலரைக் கொண்டு அவ்விரிவுரையின் நிறைவு விழாவும் கொண்டாடப்பட்டது. 22-3-53 அன்று காலை 7-மணி முதல் பிற்பகல் 2½ மணிவரை ஆசிரியர் இளவழகனார், திருப்புகழ்மணி, திருவாசகமணி, சைவப் பெரியார் திரு. ச. சச்சிதாநந்தம் பிள்ளை முதலிய தக்கோர் தொடர, நால்வர் திருவுருவங்களை விமானத்தில் தேரில் அழகுற இருத்தி, பன்னிரு திருமுறைகளை யானை மேல் ஏற்றி, ஒலிப்பெருக்கியோடு இசைவள்ளல் திரு. சங்கரலிங்கம் அவர்கள் திருமுறைப் பாடல்களைக் கருவிகளோடு இணைந்து பாடிக்கொண்டு வர, அங்கங்கே திருமுறைப் பெருமைகளை விளக்கி வீதிச் சொற்பொழிவுகளும் செய்வித்துப் பெருங் கிளர்ச்சியுடன் திருமுறைவிழா செய்யப் பெற்றது.

சூளைப்பகுதியில் உள்ள செல்வர் சிலரும், அன்பர் பலரும் பெரியோர்களும் இளைஞர்களும் ஆண்களும் பெண்களுமாக இணைந்து நின்று அவ்விழாவை மிகவும் [illegible]ர்வத்துடன் அழகாகவும் [illegible]கவும் செய்ததைப் பார்த்த[illegible] 'இந்தக் காலத்தி

ஆகவே, துறவு என்ற சொல் முதலில் கூடுதல் என்னும் கருத்தைத் தென்றும் அதாவது அருளைக் கூடுதல் என்றும், அங்ஙனம் கூடுகையில் பெரும்[illegible] விடுபடுகிறது என்[illegible] அறிக.

லும் இப்படி நடக்கின்றதே' என்று எண்ணி எண்ணி வியக்கும்படி இருந்தது.

வீதி எங்கும் தோரணங்களும், மோர், பால், சுவைநீர், கற்கண்டு, சர்க்கரை பழம், சந்தனம், பன்னீர், முதலியன வழங்குதலும் காணப்பட்டன. மேலே குறிப்பிட்ட பெரியோர்களையும் திருக்குறட் சொல்லடைவு ஆசிரியர் சாமி வேலாயுதம் பிள்ளை அவர்களையும் அடியேனையும் அங்கங்கே சிறிது நேரம் திருமுறைப் பெருமைகளை மக்களுக்கு எடுத்துச் சொல்லுமாறு செய்த செயல், மிக்க கிளர்ச்சியைத் தந்தது. இடையிடையே மக்களுக்குத் திருவாசக மணி அவர்கள் உருகி உருகிப் பாடிய திருவாசகப் பாடல்கள் பலரை மெய்ம் மறக்கச் செய்தன.

அன்று எம் ஆசிரியர் நிகழ்த்திய உரை, வழக்கம் போல் ஆழ்ந்து அமைந்த போக்கில் இருந்ததோடு, இக் கால இயக்கத் தலைவர்கள் நல்கும் எழுச்சியுரை போல் உள்ளத்தைத் தொடுகின்ற முறையில் உணர்ச்சி மிகுந்ததாக இருந்தது என்று அன்பர் பலர் குறிப்பிட்டனர். (அடியேன் நேரங் கடந்து வந்தமையால் அதனைக் கேட்கும் பேறு பெறவில்லை.)

திருமுறைகளுக்கு இத்துணைச் சிறப்பு செய்துயர்த்த சூழைப் பெருமக்களையும், அன்பர்களையும் பக்கம் நோக்கி வணங்கி மகிழ்கின்றேன். அவர்கள் ஆண்டவன் அருளில் நற்றொண்டுகளில் ஈடுபடுவார்களாக!

சிறக்க, தமிழில் திருவருள் உணர்வை நுகர்வு (அநுபவ) முறையில் உள்ளமுருக விளக்கும் திருமுறைப் பாடல்கள் ஆயிரக்கணக்கில் இருக்கின்றன. உலக மொழிகள் எதிலும் இத்தகைய திருப்பாடல்கள் இவ்வளவு பேரளவில் இருப்பதாகத் தெரியவில்லை.

சிவநெறிக்கு ஆதாரமாகவுள்ள இத் திருமுறைகளுக்குத் திருநாலாயிரத்துக்குள்ளது போல் நல்ல விளக்கவுரைகள் இல்லாத குறையும் இப்போது சிறிது சிறிதாக நீங்கத் தொடங்கியிருக்கிறது.

ஆசிரியர் மறைமலை அடிகள் முதன் முதலாகத் திருவாசகத்தில் உள்ள முதல் நான்கு பாடல்களுக்கு அரிய விரிவுரை ஒன்றை நெடு நாட்களுக்கு முன் செய்தார்கள். அடுத்து, அண்மையில் பண்டிதமணி கதிரேசச் செட்டியார் அவர்கள் 'கதிர்மணி விளக்கம்' என்னும் பெயரால் திருவாசகத்துக்குப் பகுதி பகுதியாகத் தெளிவான விளக்கவுரைகளை வெளியிட்டு வருகிறார்கள். இதுகாறும் திருச்சதகம், நீத்தல் விண்ணப்பம், திருவெம்பாவை இவற்றிற்கு விளக்கங்கள் வெளிப்பட்டுள்ளன. சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தார் ஏற்பாட்டின்படி, பத்தாந் திருமுறையாகிய திருமூலர் திருமந்திரத்துக்கு ஆசிரியர் இளவழகனார் அவர்கள் ஏறத்தாழ ஆயிரம் பக்கங்களுக்கு விளக்கங்கள் எழுதிக் கொடுத்திருக்கிறார்கள்.

இந்தக் காலத்திலும் திருமுறைத் தொடர்பாக இத்தகைய விழாக்களும் நிகழ்ந்து வருவதை அறிகிறபோது ஆன்றோர் அருள் வாக்குகள் அழியா இயல்பின என்பதும், நாளும் இயங்கி நாட்டை நல்வழிப்படுத்தி மேம்படுத்துவன என்பதும் தெளிவாகத் தெரிகின்றன. இம்மை வாழ்க்கையை வெறுத்து ம[illegible] நலத்துக்கே பெரிதும் [illegible] வேண்டாத் துறவு நெறியையும் சமயங்களையும் எதிர்த்து, 'இக நலத்தை இழக்காமல் மறுமை நலத்தையும் அடைய முடியும், அதுவே வீடுபேற்றிற்கு இயற்கையான எளிய வழி' என்று கற்பித்த சைவ சமயாசிரியர்கள் அருளிய திருமுறைகளுக்கு, மேலும் மேலும் இத்தகைய சிறப்புக்களைச் செய்து மன்பதையை உயர்த்த வேண்டியது தமிழ் மக்களின் நீங்காக் கடமையாகும். திருவருள் இதற்கு வேண்டிய ஊக்கத்தைக் கொடுத்துக் கொண்டுதான் இருக்கிறது.

வாழ்க திருமுறைத் திருநெறி!!

PHONE 55034 TEL. ENKAYAM
கைத்தறி ஆடைகளில் சிறந்தது எங்கள் கிசான் டிரேட்மார்க்

பட்டாடைகளுக்கும் நூலாடைகளுக்கும் சிறந்த இடம்
கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்
...ந்தெரு சென்னை 1.

நடு நாட்டுத்
திருப்பயண விளம்பரம்

திருநெறிச் செல்வீர்!

எங்கள் குருகுலத் தலைவர் ஆசிரியர் இளவழகனுர் அவர்கள், சமயாசிரியர் நெறியைப் பின்பற்றிச், சென்ற ஆண்டு தொண்டமண்டலத் திருப்பயணத்தை மேற்கொண்டு திருமுறைப் பாடல் பெற்ற திருவூர்களை எல்லாம் வழிபட்டார்கள்.

இவ்வாண்டு (விசய) சித்திரை உ-ஆம் நாள் (14-4-53) செவ்வாய் இரவு சென்னையிலிருந்து புறப்பட்டு நடுநாட்டிலுள்ள திருவூர்களை முறையே வழிபட்டுக் கொண்டு இயன்ற இடங்களில் அரிய சொற்பொழிவுகளும் நிகழ்த்தி வருவார்கள்.

ஆண்களும் பெண்களுமாகக் குருகுல அன்பர் இத் திருப்பயணத்தில் கலந்து கொள்ளுகிறார்கள்.

திருவாளர் ஓ. பி. இராமசாமி ரெட்டியார் அவர்களும், காட்டரண்பாக்கம், திரு. வரதாரெட்டியார் தம்பதிகளும் இத் திருப்பயணத்தை இனிது நடத்த இயன்ற உதவி செய்வதாக வாக்களித்து ஊக்கமூட்டியிருக்கிறார்கள்.

மற்ற அன்பர்களும், 7-4-53 செவ்வாய்க் கிழமைக்குள் ஆசிரியரின் விரிவுரை இடங்களிலும், கீழ்க்கண்ட முகவரியிலும் குறிப்பிட்டுள்ள அன்பரிடம் நேரில் விவரங்களைக் கேட்டறிந்து, முறைப்படி தம் பெயர்களைப் பதிவு செய்து கொண்டு இத் திருப்பயணத்தில் கலந்து கொள்ளலாம்.

பெயர்ப் பதிவு செய்யும் அன்பர்: திரு. வேதாசலம், மதராஸ் எலக்ட்ரிகல்ஸ், 55-57, ராட்டன் பசார், சென்னை-1.

திருப்பயண விவரங்கள்

நாள்	கிழமை	இரயில் நிலையம்	எண்	திருவூர்	நிலயத்திலிருந்து
14-4-53	செவ்வாய்	இரவு 8-30 மணிக்குச் சென்னைச் சிவனடியார் திருக்கூட்ட மண்டபத்திலிருந்து புறப்படுதல்.			
15-4-53	புதன்	திருவண்ணுமலை	(1)	திருவண்ணுமலை	மேற்கே 1 கல்
16-4-53	வியாழன்	திருக்கோயிலூர்	(2)	கீழூர்	,, 1½ ,,
,,	,,	,,	(3)	அறையணி நல்லூர் (பெண்ணைநதிக் கரை)	,, ¼ ,,
17-4-53	வெள்ளி	முண்டியம்பாக்கம்	(4)	புறவார்பனங்காட்டூர்	வடகிழக்கே 2 ,,
,,	,,	சின்னபாபு சமுத்திரம்	(5)	வடுகூர்	மேற்கே 2 ,,
,,	,,	விழுப்புரம்	(6)	திருவாமாத்தூர்	வடமேற்கே 4
18-4-53	சனி	திருத்துறையூர்	(7)	திருத்துறையூர்	மேற்கே 1
,,	,,	பண்ணுருட்டி	(8)	திருவதிகை	கிழக்கே 1
19-4-53	ஞாயிறு	திருப்பாதிரிப் புலியூர்	(9)	திருமாணிக்குழி	மேற்கே (5½ ,,
,,	,,	,,	(10)	திருப்பாதிரிப்புலியூர்	மேற்கே ½ ,,
20-4-53	திங்கள்	ஆலப்பாக்கம்	(11)	திருச்சோபுரம் (கடற்கரை)	கிழக்கே 1½ ,,
,,	,,	,,	(12)	திருத் தினைநகர்	தென்மேற்கே 6 ,,
21-4-53	செவ்வாய்	திருவெண்ணெய் நல்லூர் ரோடு	(13)	திருமுண்டீச்சுரம்	மேற்கே 1 ,,
,,	,,	,,	(14)	திருவிடையாறு	,, 6½ ,,
22-4-53	புதன்	,,	(15)	திருவெண்ணெய் நல்லூர்	,, 4 ,,
23-4-53	வியாழன்	(இருந்தை)	(16)	திருநாவலூர்	கிழக்கே 3 ,,
,,	,,	உளுந்தூர்ப் பேட்டை	(17)	திருநல்வெண்ணெய்	மேற்கே 6 ,,
24-4-53	வெள்ளி	விருத்தாசலம் டவுன்	(18)	திருக்கூடலை யாற்றூர்	தென் கிழக்கே 18 ,,
,,	,,	,,	(19)	திரு எருக்கத்தம் புலியூர்	,, 9 ,,
,,	,,	,,	(20)	திருமுதுகுன்றம்	கிழக்கே ½
25-4-53	சனி	பெண்ணுகடம்	(21)	திருக்கடந்தை	,, 1½ ,,
,,	,,	,,	(22)	நெல்வாயிலரத்துறை	மேற்கே 3
26-4-53	ஞாயிறு	வடலூர் வழியாகச் சென்னை சேர்தல்.			

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்: இ. சு. பாலசுந்தரம்; குருகுல அச்சகம். தாம்பாக்கம்: மதுராந்தகம் (அஞ்.)